Good food, Good life

# பத்திரிகைச் செய்தி

கொழும்பு, ஆகஸ்ட் 15, 2022

## நெஸ்லே லங்கா நிறுவனம் 2022 இல் இலங்கையின் மிகவும் நன்மதிப்புடைய உணவு மற்றும் பான வகை நிறுவனம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது

*மிகவும் நன்மதிப்புடைய முதல் 20 நிறுவனங்கள் மத்தியில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது*

சமீபத்தில் வெளியிடப்பட்ட LMD இன் மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களின் தரவரிசை வெளியீடு 2022 இல், இலங்கையில் மிகவும் நன்மதிப்புடைய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக நெஸ்லே லங்கா நிறுவனம் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பல்வேறு தொழில் துறைகளில் உள்ள 100 க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற வர்த்தக நிறுவனங்களில், நெஸ்லே நிறுவனம் முதல் 20 மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

"எமது வாக்குறுதியான 'நல்லுணவு, நல்வாழ்வு' என்பதற்கு உண்மையாக அர்த்தம் கற்பிக்கும் வகையில், 115 ஆண்டுகளுக்கும் மேலாக ஆரோக்கியமான குடும்பங்கள், வலுவூட்டப்பட்ட சமூகங்கள் மற்றும் பசுமையான இலங்கைக்கு பங்களிக்க நாங்கள் பல்வேறு முயற்சிகள் மூலம் பங்களித்து வந்துள்ளோம். உணவு மற்றும் பான வகைப் பிரிவில் 'துறை சார் வெற்றியாளராக' அறிவிக்கப்பட்டுள்ளமையானது, நாட்டில் நாம் ஆழமாக வேரூன்றியுள்ளதை மீண்டும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. மேலும், இது போன்ற நன்மதிப்பிற்குரிய தரவரிசையில் நாமும் அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். நாம் பல சவால்களை எதிர்நோக்கும் இவ்வேளையில், எமது அன்பிற்குரிய இலங்கை நுகர்வோருக்கு ஆரோக்கியமான மற்றும் சுவையான தயாரிப்புகளை தொடர்ந்து வழங்கும் அதே சமயம், எமது வழங்கல் சங்கிலியிலுள்ள எம்முடன் தொடர்புபட்ட தரப்பினருடன் இணைந்து, சமூகங்களுக்கும், பூமிக்கும் நன்மைபயக்கும் எமது வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதற்கு இந்த அங்கீகாரம் உண்மையிலேயே எமக்கு மிகுந்த ஊக்கமளிக்கிறது,'' என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்சென்யா அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக, நெஸ்லே ஆனது 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வந்துள்ளது. 'இன்றும், எதிர்வரும் தலைமுறையினருக்கும் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருவது' என்ற அதன் நோக்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, நெஸ்லே தனது பல்வேறுபட்ட உணவு மற்றும் பான வகை வரிசை மூலம் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு ஊட்டமளித்து வருகிறது.

இலங்கையில் விற்பனை செய்யப்படும் நெஸ்லே தயாரிப்புகளில் 90% க்கும் அதிகமானவை குருநாகலில் உள்ள அதன் அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதால், இந்நிறுவனம் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்து வருகிறது. நிறுவனத்தால் நேரடியாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ள 800 க்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிப்பதற்கு மேலதிகமாக, தேங்காய்ப் பால் மாவின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகவும், இலங்கையில் அதிகளவில் புதிய பால் சேகரிப்பாளர்களில் ஒன்றாகவும், நெஸ்லே லங்கா நிறுவனம் உள்நாட்டு சமூகத்திற்கும் மற்றும் தனது வழங்கல் சங்கிலியிலுள்ள 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள், பாற்பண்ணையாளர்கள் மற்றும் ஏனைய வணிகப் பங்காளர்களுக்கு ஆதரவளித்து வருகிறது. 2050 ஆம் ஆண்டளவில் தனது வழங்கல் சங்கிலி முழுவதும் நிகர பூச்சிய உமிழ்வை அடையும் நோக்கத்தை எய்துவதன் மூலம், அதன் தயாரிப்புகள் பூமிக்கு நல்லவை என்பதை உறுதிப்படுத்தவும் நிறுவனம் வலுவான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

100 க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் இருந்து கருத்துக் கணிப்புக்குப் பதிலளித்தவர்களின் கருத்துக்களைத் தொகுத்து, NielsenIQ நடத்திய வருடாந்த கணக்கெடுப்பின் அடிப்படையில் LMD வழங்கும் 'மிகவும் நன்மதிப்புடைய' தரவரிசை அமைந்துள்ளது. தர உணர்வு, புத்தாக்கம், வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு, நிறுவன கலாச்சாரம், வலுவியக்கம், நேர்மை, நிர்வாக முகாமைத்துவத்தின் சுயவிவரம் மற்றும் பணி இலக்கு உள்ளிட்ட பல அளவுருக்கள் முழுவதும் பதிலளித்தவர்களால் இந்நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

---

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |